## தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அவர்களின் உரை

பெருநகர சென்னை மாநகராட்சி வளர்ந்து வரும் சென்னை மாநகர மக்களின் அடிப்படைத் தேவைகளை முன்னிறுத்தி, பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. மக்களின் தேவைகளைத் தொடர்ந்து செயல்படுத்தும் வண்ணம், 2023-2024-ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, செயல் திட்டங்கள் மற்றும் அவைகளுக்கான நிதி ஆதாரங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிதி நிலை**

2023-2024 ஆம் நிதியாண்டின் வருவாய் கணக்கு தலைப்பில் வருவாய் வரவு ரூ.4,131.70 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.4,466.29 கோடியாகவும், மூலதன வரவு ரூ.3,554.50 கோடியாகவும், மூலதனச் செலவு ரூ.3,560.16 கோடியாகவும் இருக்கும்.

**வருவாய் கணக்கு**

வருவாய் கணக்கின் வரவுகள் 2023-2024ஆம் நிதியாண்டில் ரூ.4,131.70 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2023-2024ஆம் நிதியாண்டில் வருவாய் இனங்களின் செலவு ரூ.4,466.29 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது.

## வருவாய் வரவினங்கள்

- **சொத்து வரி :** 2023-2024ஆம் நிதியாண்டில் இந்த வருவாய் ரூ.1,680 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

❖ **தொழில் வரி :** 2023-2024ஆம் நிதியாண்டில் வரவு - செலவு திட்டத்தில் இவ்வரி வருவாய் ரூ.500 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## அரசு ஒதுக்கீடு செய்யும் வருவாய்

❖ **முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி:** 2023-2024 ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் வருவாய் ரூ.250 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ **மாநில நிதிக்குழு மானியம் :** 6-வது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கென தனியே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், 2023-2024ஆம் நிதியாண்டில், இவ்வினத்தின் வருவாய் ரூ.850 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## இதர வருவாய்

❖ 2023-2024 ஆம் நிதியாண்டில் இதர வருவாய் இனங்களின் மூலம் ரூ.822.39 கோடி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வருவாய் செலவினங்கள்

❖ **பணியாளர் சம்பளம் மற்றும் ஓய்வூதியம்:** 2023-2024ஆம் நிதியாண்டில், இத்தலைப்பின் கீழ் ரூ.1,939.98 கோடி செலவினம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

❖ **நிர்வாகச் செலவு:** 2023-2024 ஆம் நிதியாண்டில், இத்தலைப்பின் கீழ் செலவினத்திற்காக ரூ.231.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி செலவினங்கள்:** நடப்பு நிதியாண்டில் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்காக ரூ.1,079.31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு சொத்துக்கள், சாலைகள், கட்டடங்கள், பூங்காக்கள், மயான பூமிகள், விளையாட்டு மைதானங்கள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகள் ஆகியவற்றினை பராமரித்து மேம்படுத்தவும், தூய்மைப் பணிக்காகவும் மற்றும் சுகாதார பணிகளை மேற்கொள்ளவும் 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.1,434.06 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **கடனுக்கான வட்டி செலுத்துதல்:** 2023-2024 ஆம் நிதியாண்டில் இவ்செலவினத்திற்கென ரூ.148.82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மூலதன வரவுகள்

2023-2024 ஆம் நிதியாண்டில் மூலதன வரவு தலைப்பின் கீழ் ரூ.3,554.50 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## மூலதனச் செலவு

பெருநகர சென்னை மாநகராட்சி, பல்வேறு துறைகள் மூலமாக மூலதனப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. மூலதனப்பணிகளுக்காக 2023-2024ஆம் நிதியாண்டில் ரூ.3,560.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## துறைவாரியாக 2023-2024 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள மூலதன திட்டங்கள்

❖ **பேருந்து சாலைகள் :** தமிழ்நாடு அரசின் சிங்கார சென்னை 2.0 திட்டம் மற்றும் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சாலைப் பணிகளுக்காக ரூ.881.20 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ **மழைநீர் வடிகால்வாய்கள் :** கீழ்கண்ட திட்டங்களின் வாயிலாக, மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.1,482.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

- கொசஸ்தலையார் பகுதி – ஆசிய வளர்ச்சி வங்கி நிதி (ADB)
- கோவளம் பகுதி – ஜெர்மன் வங்கி நிதி (KfW)
- சீர்மிகு நகரத் திட்ட நிதி (Smart City Scheme)
- அம்ரூட் 2.0 நிதி
- மாநில பேரிடர் தடுப்பு நிதி

❖ **திடக்கழிவு மேலாண்மை :** தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்தல், குப்பை கொட்டும் கிடங்குகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல் மற்றும் இதர பணிகளுக்காக ரூ. 260.52 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ **பாலங்கள் :** உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் மூலதன மான்யம் நிதி மூலமாக புதிய பாலங்கள் கட்டுமான பணிகள் மற்றும் பாலங்கள் விரிவுபடுத்தும் பணிகளுக்காக ரூ.102.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ **கட்டடம் :** பெருநகர சென்னை மாநகராட்சியில், NUHM திட்டம், சிங்கார சென்னை – 2.0 திட்டம், உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி, தூய்மை இந்தியா திட்ட நிதி ஆகியவற்றினை கொண்டு நகர்புற சுகாதார மையங்கள், கழிப்பறைகள், வாகன இயக்கூர்தி நிலையங்கள்

கட்டுதல், பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், வணிக வளாகங்கள் கட்டுதல் மற்றும் ஏனைய பிற பணிகளுக்காக ரூ.104.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ **மின்சாரம் :** நிர்பயா திட்ட நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி ஆகியவற்றின் மூலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் புதிய தெரு மின்விளக்குக் கம்பங்கள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ **இயந்திரப் பொறியியல் :** சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான வாகனங்களை நிர்பயா திட்டம் மற்றும் தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் கொள்முதல் மேற்கொள்ள ஏதுவாக ரூ.71.29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ **கல்வி : பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட சிங்கார சென்னை – 2.0 திட்டத்தின் கீழ் கட்டடத் துறையில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ.55 கோடியிலிருந்தும் மற்றும் சிறப்பு திட்டங்கள் துறையால் சீர்மிகு நகரம் (CITIIS) திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.43 கோடியிலும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.** மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதவதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.4 கோடி கட்டடத்துறையில் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களுக்கு தேவையான சாய்வு இருக்கைகள், ஆய்வுக்கூட உபகரணங்கள், கணிப்பொறி சார்ந்த உபகரணங்கள், வலைதள அமைப்புகள் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ.7.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **சுகாதாரம் :** பெருநகர சென்னை மாநகராட்சியில் NUHM திட்ட நிதியின் கீழ் கட்டடத் துறையில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.24 கோடியிலிருந்து சுகாதாரத் துறைக்கான கட்டடங்கள் கட்டப்படும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் பரிசோதனை கூடங்களை நவீனப்படுத்துதல், நாய்

மற்றும் மாடு பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் மற்றும் கொசு ஒழிப்பு பணிக்கான புகைபரப்பும் இயந்திரம் கொள்முதல் செய்ய ரூ.5.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **குடும்ப நலம் :** நவீனப்படுத்தப்பட்ட மகப்பேறு மருத்துவமனைகளுக்கு கூடுதலாக தேவைப்படும் அறுவை சிகிச்சை அரங்க உபகரணங்கள் / இதர உபகரணங்கள் கொள்முதல் செய்ய ரூ.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

- **சிறப்பு திட்டங்கள் :** உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி, சீர்மிகு நகரத்திட்டம், சிட்டீஸ் திட்டம், நிர்பயா திட்டம், சிங்கார சென்னை 2.0 திட்டம், சென்னை மாநகர பங்களிப்பு (உலக வங்கி நிதி) திட்டம் போன்ற பல்வகை நிதி ஆதாரங்களை கொண்டு மூலதனப் பணிகளை மேற்கொள்ள ரூ.313.45 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

- **பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் :** சிங்கார சென்னை 2.0 திட்டம் மற்றும் மூலதன நிதி ஆகியவற்றினை கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திறந்த வெளி நிலங்களில் பூங்காக்கள், விளையாட்டுத் திடல்களை அமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூ.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மண்டலங்கள் :** தமிழ்நாடு அரசு மான்யத்தின் மூலமாக நகர்ப்புற சுகாதார மையங்கள் கட்டுமானம், தூய்மை இந்தியா திட்டம் 2.0 நிதியின் மூலம் பொதுக் கழிப்பிடம் மற்றும் பிற அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள அனைத்து மண்டலங்களுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ரூ.191.64 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- **மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்டம் :** 2023-2024 ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் :** 2023-2024 ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பயனுள்ள இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க எனக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த நிதி நிலை அறிக்கையை நல்ல முறையில் வடிவமைத்துக் கொடுத்த ஆணையர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**நன்றி, வணக்கம்**

**திருமதி. சர்பஜெயா தாஸ்**
**தலைவர்**
**நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)**

சென்னை
2023 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2054
சுபகிருது பங்குனி 13 – ஆம் நாள்

